பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 658 **நாள்: 07.11.2026**

தீபாவளிப் பண்டிகையின்போது உருவாகும் பட்டாசுக் கழிவுகளைத் தனியாகச் சேகரித்து பாதுகாப்பான முறையில் அகற்றுவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தலா 50 கிலோ கொள்ளளவு கொண்ட 30,000 எண்ணிக்கையிலான பைகள் (Specialized Bags) தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இதர வீட்டுக் கழிவுகளுடன் பட்டாசுக் கழிவுகளை கலக்காமல் தனியாகச் சேகரித்து வைத்து, தூய்மைப் பணியாளர்களிடம் அவற்றை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் ஆணையாளர் டாக்டர் ஜி. எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் தீபாவளிப் பண்டிகையின் போது வெடிக்கப்படும் பட்டாசுகளால் உருவாகும் பட்டாசுக் கழிவுகளைப் பாதுகாப்பான முறையில் அகற்றும் வகையில், பட்டாசுக் கழிவுகளைத் தனியாகச் சேகரித்து அகற்றுவதற்காகச் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பட்டாசுக் கழிவுகளைக் கையாளுதல் மற்றும் அவற்றைத் தனியாகச் சேகரிப்பதன் அவசியம் குறித்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களில் தொடர்ச்சியாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், மாநகராட்சியின் பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் மூலம் பட்டாசுக் கழிவுகள் தொடர்பான விழிப்புணர்வு ஒலிப்பதிவுகளும் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

எனவே, பொதுமக்கள் தங்களது வீடுகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளில் உருவாகும் பட்டாசுக் கழிவுகளை இதர வீட்டுக் கழிவுகளுடன் கலக்காமல் தனியாகச் சேகரித்து வைத்து, தங்களது பகுதிகளுக்கு வரும் பெருநகர சென்னை மாநகராட்சித் தூய்மைப் பணியாளர்களிடம் அவற்றை தனியாக ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பெருமளவில் திடக்கழிவுகளை உருவாக்கும் குடியிருப்பு வளாகங்களின் (Bulk Waste Generator - BWG) நிர்வாகிகள், தங்களது குடியிருப்பு வளாகங்களில் உருவாகும் பட்டாசுக் கழிவுகள் அனைத்தையும் இதரக் கழிவுகளுடன் கலக்காமல் தனியாக ஓரிடத்தில் சேகரித்து வைத்து, மாநகராட்சித் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பட்டாசுக் கழிவுகளைத் தனியாகச் சேகரிப்பதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தலா 50 கிலோ கொள்ளளவு கொண்ட 30,000 எண்ணிக்கையிலான பைகள் (Specialized Bags) தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தூய்மைப் பணியாளர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் பட்டாசுக் கழிவுகளை இப்பைகளில் தனியாகச் சேகரிப்பார்கள். இதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் 600 பணியாளர்கள் மற்றும் 350 வாகனங்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு தனியாகச் சேகரிக்கப்படும் பட்டாசுக் கழிவுகள் மாநகராட்சியால் உரிய முறையில் எடுத்துச் செல்லப்பட்டு, பாதுகாப்பான முறையில் அகற்றப்படும்.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் தீபாவளிப் பண்டிகை நாட்களில் தீவிரத் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. குறிப்பாக, இரவு நேரங்களில் இயந்திரங்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு சாலைகளைப் பெருக்கிச் சுத்தம் செய்யும் பணிகள் தீவிரப்படுத்தப்படும்

தீபாவளிப் பண்டிகையின்போது பொது மக்கள் பட்டாசுகளை வெடிக்கும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

செய்ய வேண்டியவை (Do's):

- பொதுமக்கள் குறைந்த அளவு மாசு மற்றும் குறைந்த ஒலி எழுப்பக்கூடிய பசுமைப் பட்டாசுகளை (Green Crackers) மட்டுமே வெடிக்க வேண்டும்.
- பொதுமக்கள் தமிழக அரசு அனுமதித்துள்ள நேரங்கள் ஆன காலை 6.00 மணி முதல் 7.00 மணி வரையிலும், மாலை 7.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் மட்டுமே பட்டாசுகளை வெடிக்க வேண்டும்
- பட்டாசுக் கழிவுகளை இதர வீட்டுக் கழிவுகளுடன் கலக்காமல் தனியாகச் சேகரித்து, மாநகராட்சித் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்க வேண்டும்.
- பட்டாசுகளை வெடிக்கும்போது ஏதேனும் தீ விபத்து ஏற்பட்டால், பெரிய அளவிலான விபத்துகளைத் தவிர்க்கும் வகையில், பொதுமக்கள் உடனடியாகத் தண்ணீரைப் பீய்ச்சி அடித்து தீயை அணைக்க வேண்டும்

செய்யக்கூடாதவை (Don'ts):

- அதிக ஒலி எழுப்பக்கூடிய தொடர் பட்டாசுகளை (Series Crackers) வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- மருத்துவமனைகள், பள்ளிகள், நீதிமன்றங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்கள் போன்ற அமைதிப் பகுதிகளில் பட்டாசுகளை வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- குடிசைப் பகுதிகள் மற்றும் தீ விபத்து ஏற்பட அதிக வாய்ப்புள்ள இடங்களுக்கு அருகில் பட்டாசுகளை வெடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.
- பட்டாசுகள் மற்றும் பட்டாசுக் கழிவுகளை ஒன்றாகக் குவித்து வைத்து தீ மூட்டுவதையும், மின்மாற்றிகளுக்கு அருகில் பட்டாசுகளை வெடிப்பதையும், குப்பைத் தொட்டிகளுக்குள் எரியும் பட்டாசுகளைப் போடுவதையும் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

எனவே, பொதுமக்கள் தீபாவளிப் பண்டிகையின்போது பாதுகாப்பான முறையில் பட்டாசுகளை வெடிக்குமாறும், பட்டாசு வெடிப்பதால் உருவாகும் கழிவுகளை மக்கும் மற்றும் மக்காத குப்பைகளுடன் கலக்காமல் தனியாகச் சேகரிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், பட்டாசுக் கழிவுகளைச் சாலைகள், தெருக்கள், மழைநீர் வடிகால்கள் மற்றும் பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்து, தங்களது பகுதிகளுக்கு வரும் மாநகராட்சித் தூய்மைப் பணியாளர்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

சென்னையைத் தூய்மையாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்க பொதுமக்கள் அனைவரும் மாநகராட்சியின் இச்சிறப்பு நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

P.R. No. 658 **Date : 07.11.2026**

Special Arrangements for Separate Collection and Safe Disposal of Diwali Firecracker Waste – GCC Appeals to the Public for Cooperation

As per the instructions of the Commissioner of Greater Chennai Corporation, Thiru. Dr. G. S. Sameeran, I.A.S., special arrangements have been made by the Solid Waste Management Department of the Greater Chennai Corporation for the separate collection and safe disposal of firecracker waste generated during the Diwali festival in the Chennai Corporation limits.

Further, the Greater Chennai Corporation has been continuously conducting awareness programmes in schools, colleges and public gathering places to educate the public on the proper handling of firecracker waste and the importance of its separate collection. Awareness audio messages regarding firecracker waste are also being broadcast through the Corporation's battery-operated BOV vehicles.

Therefore, the public is requested to collect firecracker waste generated in their houses and residential areas separately, without mixing it with other household waste, and hand it over to the Greater Chennai Corporation conservancy workers visiting their respective areas.

Further, the administrators of residential complexes classified as Bulk Waste Generators (BWGs) are requested to collect all firecracker waste generated within their premises separately at a designated location, without mixing it with other waste, and hand it over to the Corporation's conservancy workers.

For the separate collection of firecracker waste, the Greater Chennai Corporation has distributed 30,000 specially designated bags (Specialized Bags), each with a capacity of 50 kg, to conservancy workers. The workers will separately collect the firecracker waste received from the public in these bags. For this purpose, 600 personnel and 350 vehicles have been deployed by the Greater Chennai Corporation.

The separately collected firecracker waste will be transported by the Corporation and disposed of safely through appropriate methods.

In addition, intensive Mass cleaning operations will be undertaken by the Greater Chennai Corporation during the Diwali festival days. In particular, night-time road sweeping and cleaning operations using mechanical sweepers and conservancy workers will be intensified.

Guidelines to be Followed by the Public While Bursting Firecrackers During the Diwali Festival

Do's:

- The public should burst only Green Crackers, which generate lower levels of air pollution and noise.
- The public should burst firecrackers only during the time slots permitted by the Government of Tamil Nadu, i.e., from 6.00 AM to 7.00 AM and from 7.00 PM to 8.00 PM.
- Firecracker waste should be collected separately without mixing it with other household waste and handed over to the Greater Chennai Corporation conservancy workers.
- In the event of a fire while bursting firecrackers, the public should immediately spray water to extinguish the fire and prevent major accidents.

Don'ts:

- Avoid bursting series crackers, which generate excessive noise.
- Avoid bursting firecrackers in silence zones such as hospitals, schools, courts and places of worship.
- Avoid bursting firecrackers near huts and other areas that are highly vulnerable to fire accidents.
- Strictly avoid piling up firecrackers and firecracker waste and setting fire to them.
- Avoid bursting firecrackers near electrical transformers.
- Never throw burning firecrackers into garbage bins.

Therefore, the public is requested to burst firecrackers safely during the Diwali festival and collect the resulting waste separately without mixing it with biodegradable and non-biodegradable waste. They are also requested not to dump firecracker waste on roads, streets, stormwater drains or in public places, and instead hand it over to the Corporation's conservancy workers visiting their respective areas.

The Greater Chennai Corporation sincerely appeals to all members of the public to extend their full cooperation to these special initiatives of the Corporation to keep Chennai clean and safe.

Issued by : Joint Director/Public Relations Officer,
Greater Chennai Corporation